**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழ - 2020**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 மறுதலிப்புக்கான அபிப்பிராயம்

இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 107(5) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பல்கலைக்கழகத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்வி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கல்வி பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்ககழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பல்கலைக்கழகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமை

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை அரச துறை கணக்கீட்டு நியமங்கள் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யாமை காரணமாக ரூபா.893,887,711 ஆன நிலையான சொத்துக்களை முற்று முழுதாக தேய்மானம் செய்திருப்பினும், மேலும் பயன்பாட்டில் காணப்பட்டது. அதன்படி மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமம் 03 பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | நிலையான சொத்துக்களின் பதிவேடு தயாரிப்பதற்காக தற்போது நடவடிக்கைகள் மேறகொள்ளப்பட்டு வருகின்றன. நிலையான சொத்துக்களின் பதிவேடு தயாரித்த பின்னர் குறித்த எல்லா குறைப்பாடுகளையும் அகற்றுவதற்கான ஆற்றல் உள்ளது. அதற்கமைவாக குறித்த குறைப்பாடுகளை எதிர்காலத்தில் செவ்வையாக்கப்படும். | இலங்கை பொது துறை கணக்கீட்டு நியமங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டுக்காக செலுத்தப்பட வேண்டிய கணக்காய்வு கட்டணம் ரூபா. 1,104,000 ஐ மேலதிகமாக கணக்கு வைக்கப்பட்டமை காரணமாக நடைமுறை பொறுப்புகள் அந்தப் பெறுமதியில் அதிகமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வருங் காலத்தில் இந்த தவறினை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | ஆண்டுக்கு ஏற்புடையதான செலவினங்களை செவ்வையாக அடையாளம் காணுதல் வேண்டும் |
| (ஆ) | கடந்த ஆண்டில் வேலைகள் முடிவுறுத்தப்பட்ட செலவினம் ரூபா. 1,934,137 ஆன மருத்துவ பீடத்தின் உடற்கூறியல் ஆய்வுகூடம் நவீனமயப்படுத்தல்- கட்டிடங்களின் கீழ் மூலதனமயப்படுத்தாமல் நிதிக் கூற்றுகளில் மேற்கொள்ளப்படும் வேலைகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவில் தகவல்களை பெற்றுக்கொண்டு எதிர்வருங் காலத்தில் செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | மேற்கொள்கின்ற வேலை மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழகத்தின் நீர் தேவையினை பூர்த்தி செய்து கொள்ளப்படும் நீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் 02 ஏக்கர் 01 ரூட் அளவிலான 02 காணித் துண்டுகள் பம்பஹின்ன நீர் திட்டம் பொருட்டு முறையான வகையில் கையளிக்கப்படாமையினால் 2018 ஆம் ஆண்டில் அதன் பெறுமதி ஒழுங்கு முறையில் ரூபா. 1,600,000ம் ரூபா. 900,000 ம் என்ற வகையில் கணக்குகளில் அகற்றப்பட்டிருந்தது. | இது தொடர்பாக எதிர் காலத்தில் தேடிப்பார்த்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பல்கலைக்கழகத்திற்குரிய சொத்துக்களை முறையாக கையளிப்பதற்கு முன்னர் கணக்குகளிலிருந்து அகற்றப்படல் ஆகாது. |
| (ஈ) | ஆலோசனை சேவை கட்டணங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ஒப்பந்தக்காரரால் தொடுக்கப்பட்ட வழக்கு பிரகாரம், 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் 29 ஆந் திகதி அவரிடம் உரிய கட்டணத்தை செலுத்தும்படி வழங்கியிருந்த நீதிமன்ற கட்டளைக்கமைவாக செலுத்தப்பட வேண்டிய எதிர்பாரா செலவின பொறுப்புகளை அடையாளம் காணப்பட்டு நிதிக் கூற்றுகளில் ஒதுக்கீடு | நீதிமன்ற தீர்வு மூலம் நடுத்தீர்ப்பினை நடைமுறைப்படுத்துவதாக அறிவித்திருப்பினும், செலுத்தப்பட வேண்டிய பணத் தொகையை உறுதியாக காண்பிக்கப்படவில்லை. ஆகையால் எதிர்வருங் காலத்தில் ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு அல்லது வெளிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை | எதிர்பாரா செலவின பொறுப்புகளை அடையாளம் காணப்பட்டு ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்வதற்கு அல்லது வெளிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு அல்லது வெளிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | மேற்கொள்ளப்படும். | |
| (உ) | உயர் கல்வியினை விஸ்தரித்தல் மற்றும் அபிவிருத்தியை துரிதப்படுத்தும் கருத்திட்டத்தில் (Accelerating Higher Education and Development Project) (AHEAD) மீளாய்விற்கான ஆண்டில் பணம் கிடைக்கப்பெறல் மற்றும் பணம் செலுத்தல் ஒழுங்குமறையில் ரூபா.207,169,036ம், ரூபா.207,105,986ம், ஆண்டில் திசெம்பர் 31 அந் திகதியில் நிலவிய ரூபா. 63,050 ஆன பண மீதியும் காசுப் பாயச்சல் கூற்றில் குறிப்பு வைக்கப்படவில்லை. | சுற்றுநிருப ஆலோசனைகளுக்கமைவாக கருத்திட்டத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்களை மூலதனமயப்படுத்தப்பட்டது. | பல்கலைக்கழகத்திடம் கிடைக்கப்பெறும் எல்லா பண கிடைக்கப்பெறலும், கொடுப்பனவுகளும், கையிருப்பும், காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | எதிர் வரும் ஆண்டுக்காக கிடைக்கப்பெற்றிருந்த மொத்தம் ரூபா. 1,873,417 ஆன பட்ட நிலை பின்படிப்பு கட்டணங்களை வருமானமாக மீளாய்விற்கான ஆண்டில் கணக்கு வைக்கப்பட்டமையால் ஆண்டின் பற்றாக்குறை அந்த அளவிலயே குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | முன்னரான ஆண்டிலிருந்து பட்ட நிலை பின்படிப்பு கற்கைநெறி கட்டணங்களை பண அடிப்படையில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. குறித்த குறைப்பாடுகளை எதிர்காலத்தில் செவ்வையாக்கப்படும். | நிதிக் கூற்றுகளை செவ்வையாக்குதல் வேண்டும். |
| (எ) | மீளாய்விற்கான ஆண்டில் ஆங்கில சான்றிதழ் கற்கைநெறி கட்டணங்களின் வருமானத்தில் மாணவர்களிடம் மீளவும் செலுத்தப்பட்ட மொத்தம் ரூபா.1,667,000 ஐ தவறுதலாக அந்த அளவில் வருமானக் கணக்கு மற்றும் பிற்போடப்பட்ட வருமானக் கணக்கு என்பவற்றில் ஒழுங்கு முறையில் பற்று மற்றும் வரவு வைத்தல் காரணமாக ஆண்டின் வருமானம் குறைவாகவும் பிற்போடப்பட்ட வருமானம் அதிகமாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலத்தில் இந்த தவறுகளை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிக் கூற்றுகளை செவ்வையாக்குதல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு எழுத்திலான சான்றுகள் இல்லாமை

| விடயம் | தொகை ரூபா. | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| பல்வேறு வைப்புகள் | 1,235,430 | அட்டவணை | எதிர் காலத்தில் இதற்கு புறம்பான பதிவேடு பேணிச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பல்வேறு வைப்புக் கணக்குகளில் உள்ள மீதிகளை அடையாளம் காணக் கூடியவாறு பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். |

### 1.6 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 ஆண்டுக்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்படும் மொத்தம் ரூபா. 62,686,386 ஆன பல்வேறு கடனாளிகளின் மீதி 8 ம், கடந்த ஆண்டு தொடக்கம் மகாபொல நம்பிக்கை நிதியத்திடம் செலுத்தப்பட வேண்டியுள்ள ரூபா. 2,201,150 ம் மீளாய்விற்கான ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | நிருமாணிப்புகளை முடிவுறுத்தப்பட்டு தற்போது பயன்படுத்தும் 06 கட்டிடங்களின் பொருட்டு இறுதி பற்றுச்சீட்டுகளை சமர்ப்பிக்கப்படாமையால் குறித்த மீதிகளை செலுத்துவதற்கு முடியாதுள்ளது. மகாபொல நம்பிக்கை நிதியத்திடம் செலுத்தப்பட வேண்டிய பணத் தொகை எதிர்வருங் காலத்தில் சீராக்கப்படும். | கடனாளிகளின் மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆவது பிரிவு மற்றும் 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் பணிப்பளார் நாய- | நிதி அமைச்சர் அவர்களின் அனுமதிக்கமைவாக நிறுவனத்தில் உள்ள மிகை பணத்தை முதலீடு செய்வதற்கு முடியுமாயினும், அவ்வாறான அனுமதியின்றி மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா. 56,568,786 ஆன பணத் தொகை 11 வைப்புக் கணக்குகளில் | இந்த நிலையான வைப்புகளுக்கிடையில் சுய உற்பத்தி நிதியத்துடன் கூடிய அலகுகள் மூலம் மேற்கொள்ள்ப்பட்ட முதலீடுகளாவதுடன், குறித்த வைப்புகளின் பொருட்டு, சம்பந்தப்பட்ட பிரிவுகள் மூலம் உற்பத்தி செய்த பணத்தை | நிதிச் சட்டம் மற்றும் சுற்றுநிருபம் என்பவற்றின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள் ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | கத்தின் சுற்றறிக்கையில் 8.2.2 பந்தி | முதலீடு செய்யப்பட்டிருந்தது. | பயன்படுத்தப்பட்டுள்ளது.<br><br>அதேபோன்று மேற் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய நிலையான வைப்புகளான விளையாட்டு அபிவிருத்தி நிதியம் மற்றும் டர்ஹம் பல்கலைக்கழக நிதியமும் விசேட நோக்கங்களுடன் கூடியதாக உருவாக்கப்பட்ட நிதியங்களாவதுடன், குறித்த நிலையான வைப்புகளை ஆரம்பிக்கையில் கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| | (i) நிதி ஒழுங்குவிதி 371(2) | மீளாய்விற்கான ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தம் ரூபா. 6,020,818 ஐ 99 மீண்டுவரும் முற்பணம் தீர்ப்பதற்காக 22 நாட்கள் தொடக்கம் 363 நாட்கள் வரை கால தாமதம் ஏற்பட்டிருந்தது. | தொடர்ச்சியாக நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்படினும், தீர்ப்பதற்கு முயற்சிக்காதபடியால் இந்த தாமதம் ஏற்பட்டிருந்தது. எதிர்வருங் காலத்தில் இந்த தவறு ஏற்படாதிருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள் ளுதல் வேண்டும். |
| | (ii) நிதி ஒழுங்குவிதி 371(5) | 2016 ஆண்டு தொடக்கம் மீளய்விற்கான ஆண்டு வரை 29 சந்தர்ப்பங்களில் கருத்திட்டங்கள், மீண்டுவரும் மற்றும் ஆராய்ச்சி முற்பணம் பொருட்ட வழங்கப்பட்ட ரூபா. 9,206,526 ஐ தீர்க்கப்படவில்லை. | முற்பணம் பெற்றுக்கொண்ட தரப்புகளை அறிவுறுத்தப்பட்டிருப்பினும், தீர்க்கப்படவில்லை என்றும் ,எதிர்வரும் காலத்தில் இது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு செயலாற்றப்படும். | நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள் ளுதல் வேண்டும். |
| | (iii) நிதி ஒழுங்குவிதி 394 மற்றும் 396 | காலம்கடந்த மற்றும் இரத்துச் செய்யப்பட்டுள்ள மொத்தம் ரூபா. 1,319,084 ஆன காசோலை தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | எதிர்வருங் காலத்தில் இத் தவறை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள் ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | நிதி ஒழுங்குவிதி 571 | 2015 ஆண்டு தொடக்கம் 2018 ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா. 19,549,083 ஆன பிடிபணம் அகற்றப்படவில்லை. | பல்கலைக்கழகம் மூலம் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்கையில் அதற்காக செலுத்தப்படும் பணத்தில் பிடிபணமாக வைத்துக்கொள்ளப்படும் பணமாவதால், சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு மீள செலுத்துதல் பல்கலைக்கழகத்தின் பொறுப்பு ஆகும். ஆகைாயல இவற்றை அகற்றப்பட இயலாது. | நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் V ஆவது அத்தியாயத்தில் 7 ஆவது பந்தி | 2000 ஆண்டு தொடக்கம் 2017 ஆண்டு வரை கற்கை லீவு பெற்று வெளிநாடு சென்றுள்ள 12 அலுவலர்கள் முறிகளை மீறியமை காரணமாக அறவிடப்பட வேண்டிய ரூபா. 55,368,659 ஐ 2021 ஏப்ரல் மாதமாகும் போதும் அறவிடப்படவில்லை. அதில் தவணையாக செலுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட 03 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 28,079,397 ஐ, 2018 ஆண்டு தொடக்கம் எந்தவொரு தவணைப் பணத்தையும் அறவிடப்படவில்லை. | தவணையாக செலுத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள மூன்று அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 28,079,397 ஐ செலுத்தாமையால், சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட கடித ஆவணங்களை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | பல்கலைக் கழகத்தின் தாபனவிதிக் கோவை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள் | | | |
| (i) | 2019 ஆண்டு நவம்பர் 25 ஆந் திகதிய 09/2019 ஆம் இலக்க சுற்றுநிருபம் | 30 உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக கட்டணங்களை அறவிடப்படாமை காரணமாக, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டின் திசெம்பர் மாதம் வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா. 2,266,030 ஆன | சுற்றுநிருபத்திற்கு அமைவாக தகைமையுள்ள உத்தியோகத்தர்களாக கருதப்படுவது, நியமன கடிதத்தில் உத்தியோகபூர்வ இல்லமொன்றுக்கு அல்லது உத்தியோகபூர்வ இல்லமொன்றுக்கான கொடுப்பனவுக்கு உரித்து பெறுகின்றவர் என குறிப்பிடப்படும் உத்தியோகத்தர் மட்டும் ஆயினும், பல்கலைககழகத்தின் நியமனக் கடிதங்களில் | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. | அவ்வாறு எதனையும் குறிப்பிடப்படவில்லை. | |
| (ii) | 1998 ஆகஸ்ட் 18 ஆந் திகதிய 737 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சுற்றுநிருபம் மூலம் வசதியளிக்கப்பட்டிருந்த செலவினங்களுக்கு புறம்பாக ஏனைய செலவினங்களை மேற்கொள்வதற்காக முறிகளை மீறும் நிதியத்தில் இருந்த ரூபா. 54,550,464 பெறுமதியான 17 நிலையான வைப்புகளை மீளாய்விற்கான ஆண்டில் மீள பெறப்பட்டிருந்தது. | 2020 ஆண்டில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்று நோய் நிலைமை காரணமாக பொது திறைசேரியால் அரசாங்க நிறுவனங்களுக்கு மேற்கொண்ட ஒதுக்கீடுகளை வரையறுக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் ஆகக் குறைந்த செலவினங்களை தீர்த்துக் கொள்வதற்காக போதியளவு நிதி கிடைக்கப்பெறவில்லை என்பதுடன், குறித்த நிலைமையின் மத்தியில் பல்கலைக்கழகத்தின் பணிகளை தொடர்ச்சியாக பேணிச் செல்லுதல் கட்டாயமாகியது. ஆகையால் பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையை சிறந்த நிலையில் பராமரிக்கும் நோக்கத்தில் நிதியத்தின் பற்றாக்குறைக்கு தீர்வாக நிலையான வைப்புகள் முதிர்சியடைவதற்கு முன்னர் மீள பெற்றுக்கொள்வறத்கு தீர்மானிக்கப்பட்டது. | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (iii) | 2016 மார்ச் 01 ஆந் திகதிய 04/2016 ஆம் இலக்க சுற்றுநிருபம் | அனைத்து சுய நிதி உருவாக்க (Self-Financing Activities) செயற்பாடுகள் கொள்கையொன்றாக, செலவினங்களை ஈடு செய்யும் அடிப்படையிலும் (Cost Recovery) இலாபம் ஈட்டுதலை நோக்கமாகக் கொள்ளாத (Non Profited Basis) அடிப்படையிலும் செயற்படுத்த வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா. 11,298,902 ஆன தேறிய நிதி மிகை பெறப்பட்டிருந்தது. | எதிர்வருங் காலத்தில் இந்த தவறினை செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 91,103,424 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 89,305,389 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 1,798,035 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்விற்கான ஆண்டில் மீண்டுவரும் அளிப்புகள் ரூபா. 177,205,000 ஆல் அதிகரித்திருப்பினும், ஊழியர் ஊதியம் ரூபா. 198,036,855 ஆல் அதிகரித்திருத்தல் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்களின் பதிவேடு பொருட்டு மென்பொருள் தயாரித்தல் மற்றும் தரவு உள்ளடக்குதல் என்பவற்றுக்காக 2016 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை மொத்தம் ரூபா. 1,370,300ஐ செலுத்தப்பட்டிருப்பினும். மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியிலும் நிலையான சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கப்படவில்லை. | நிலையான சொத்துக்களின் பதிவேடு தயாரிக்கும் எல்லா நடவடிக்கைகளும் பல்கலைக்கழகம் மூலம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், முன்னரான உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அதன்படி நிலையான சொத்துக்களின் பதிவேடு தயாரித்தல் மற்றும் அதன் எல்லா நடவடிக்கைகளையும் மேற்பார்வை செய்வதற்கு குழுவொன்றை நியமனம் செய்யப்பட்டதுடன், அந்தக் குழு இறுதியாக கூடிய சந்தர்ப்பத்தில் கலந்துரையாடிய வகையில், நிலையான சொத்துக்களை அடையாளம் காணுதல், குறியிடல் மற்றும் கணினி முறைமை தயாரித்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலையான சொத்துக்களின் பதிவேடு தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் மாதமாகும் போது ஆராய்ச்சி காலவெல்லை முடிவுற்றிருந்த 21 ஆராய்ச்சி பிரேரணைகளின் பொருட்டு, ஆராய்ச்சிகளுக்கான அளிப்புகளாக ரூபா. 23,024,892 செலுத்தப்பட்டிருப்பினும். 2021 மார்ச் மாதமாகும் போதும் இறுதி ஆராய்ச்சி அறிக்கைகளை சமரப்பிக்கப்படவில்லை. | 2021 மார்ச் மாதமாகும் போது 09 இறுதி ஆராய்ச்சி அறிக்கைகளை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், நாட்டில் நிலவிய கோவிட் தொற்று நோய் நிலைமை காரணமாக எஞ்சிய 12 ஆராய்ச்சி கருத்திட்டங்களின் பொருட்டு 2021 யூலை மாதம் 31 ஆந் திகதி வரை நீடிப்பு வழங்குவதற்கு பல்கலைக்கழக ஆராய்ச்சி குழு தீர்மானித்துள்ளது. | உரிய காலப் பகுதிக்குள் ஆராய்ச்சிகளை முடிவுறுத்தப்பட்டு அறிக்கைகளை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழகம் பொருட்டு நிருவாக கட்டிடமொன்றை நிருமாணிப்பதற்காக 2007 ஆம் ஆண்டில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ரூபா. 1,494,543 ஐ அடிப்படை செலவினமாக மேற்கொண்டிருப்பினும், 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமாகும் போதும், நிருமாணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான பணிகளை மேற்கொள்ளவில்லை. | நிருவாக கட்டிடத்தை நிருமாணிக்கும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக நியமனம் செய்த குழுவால் வழங்கப்பட்ட எண்ணக்கருவிலான பத்திரம், கட்டிடத்தின் வசதி மற்றும் ஏனைய தேவைப்பாடுகளை குறிக்கும் விபர அறிக்கை மற்றும் மொத்த திட்டங்களுடன் கூடிய அறிக்கை 2021 மார்ச் 29 ஆந் திகதி நடைபெற்ற காட்டுப்பாட்டுச் சபையிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன்படி செலவின மதிப்பீடுகளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிருவாக கட்டிடத்தை நிருமாணிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.3 நிதியங்களின் குறை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஆராய்ச்சி மற்றும் சுற்றாடல் கற்கை கருத்திட்டங்களின் பொருட்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் வழங்கியுள்ள நிதியங்களை, சம்பந்தப்பட்ட பணியின் பொருட்டு உபயோகப்படுத்தாமையால், மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா. 4,418,209 ஆன பணத்தொகை பயனற்று காணப்பட்டது. | கருத்திட்டங்களுடன் தொடர்பு கொண்ட தரப்புகளால் உரிய பணத்தை கோராமையால் இந்த பணத் தொகை எஞ்சியுள்ளது. | சம்பந்தப்பட்ட நிதியங்களை பயனுள்ளவாறு உபயோகப்படுத்தல் வேண்டும். |

### 3.4 கருத்து வேறுபாடுகளுக்கான கொடுக்கல்வாங்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2016 யூன் மாதம் ரூபா. 15,964,000 ஐ செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த 130 Desktop கணினி இயந்திரங்கள் உரிய விபரக் குறிப்புகளுக்கு ஒழுங்கமையாமை தொடர்பில் 2018 பெப்ருவரி மாதத்தில் | இதன்போது பிடிபணம் குழுவின் பரிந்துரைக்கமைவாக விடுவிக்கப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரைகளை கவனத்தில் கொண்டு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | எல்லா கொள்வனவுகளும் பெறுகை வழிகாட்டல் கோவைக்கு ஒழுங்கமைதல் வேண்டுமென்பதுடன், அதற்கு முரணாக |

| | | | |
|---|---|---|---|
| | மூன்று பேர் கொண்ட விசாரணை சபை நியமனம் செய்யப்பட்டிருந்தது. 2018 மே 19 ஆந் திகதிய விசாரணை சபை அறிக்கை பிரகாரம், முழுமொத்த பெறுகை செயற்பாடுகளிலிருந்து பொறுப்பின்றி செயலாற்றியுள்ள அலுவலர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டிருப்பினும், 2021 ஏப்ரல் மாதமாகியும் ஒழுக்காற்று நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை. 2018 யூன் 21 ஆந் திகதி ரூபா. 1,596,400 ஆன பிடிபணமும் ஒப்பந்தக்காரரிடம் விடுவிக்கப்பட்டிருந்தது. | | செயற்பட்டுள்ள அலுவலர்கள் தொடர்பில் விசாரணை சபையின் பரிந்துரைகள் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆகஸ்ட் 21 அந் திகதி தொடக்கம் 30 ஆந் திகதி வரை நெதர்லாந்தில் நடைபெற்ற PIM International on management நிகழ்ச்சித்திட்டத்திற்காக அமைச்சின் அனுமதியின்றி முன்னாள் பதிவாளர் பங்குபற்றியதன் பொருட்டு, பல்கலைக்கழகம் உழைத்துக்கொண்டுள்ள நிதயிங்களிலிருந்து ரூபா 1,200,000 ஐ செலவிடப்பட்டிருந்தது. அந்த முழு பணத் தொகையையும் மீண்டும் அறவிடுவதற்கு பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்திருப்பினும், அந்தப் பணத் தொகை அறவிடப்படாது 2020 மார்ச் 31 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுகின்ற வகையில் இந்த அலுவலரை கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திடம், பல்கலைக்கழக கட்டுப்பாட்டுச் சபையால் விடுவிக்கப்பட்டிருந்தது. | இந்த அலுவலரை பல்கலைக்கழகத்திலிருந்து விடுவிக்கையில், ஏதேனும் அறவிடல் இருப்பின் அதனை அறவிடுதலுக்கு அமைவாகவே விடுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி அந்த பணத்தொகையை அறவிடுவதற்காக கடிதங்கள் மற்றும் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பியுள்ளதுடன். அதற்காக அவரிடமிருந்து கிடைக்கப்பெறும் பதிலின்படி, மேற்படி செலவினம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | பல்கலைக்கழகத்தால் செலவிடப்பட்டுள்ள செலவினத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.5 பயனற்ற அல்லது குறைப் பயன்பாட்டு ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழகத்தின் பயன்முறை விஞ்ஞான பீடத்திற்கு ஏற்புடையதாக பயற்சி அலகினை (Out Bound Training Centre) தாபிப்பதற்காக 21 ஆவது நூற்றாண்டுக்கான உயர் கல்வி கருத்திட்டம் மூலம் 2016 ஆம் ஆண்டில் ரூபா. 2,725,000 ஆன பொருட்கள் மற்றும் உபகரண-ங்கள் வழங்கப்பட்டிருப்பினும், அதற்கு தேவையான உட்கட்-டமைப்பு வசதிகள் மற்றும் திட்டங்களை தயாரிக்காமை காரணமாக 2021 மார்ச் ஆகும்-போதும் குறித்த உபகரணங்கள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்ட-துடன். பல்வேறு உபகரணங்கள் பயன்படுத்த இயலாத நிலையில் காணப்பட்டது. | தற்போது இதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்வதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், தற்போதுள்ள வசதிகளுடன் இந்த அலகினை பயனுள்ளதாக செயற்படுத்தப்படுகின்றது. | உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து பயன்படுத்த முடியுமான பொருட்கள் மற்றும் உபகரணங்களை பயனுள்ளதாக உபயோ-கப்படுத்துவதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.6 உப்பந்த நிருவாகத்தின் குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| புதிய நூலக கட்டிடம் நிருமாணிக்கும் முதல் கட்டமாக ரூபா. 315,051,433 ஆன (VAT அல்லாத) பெறுமதிக்கு 24 மாதங்களுக்குள் வேலைகளை முடிவுறுத்துவதற்காக 2018 ஆம் ஆண்டு சனவரி 30 ஆந் திகதி ஒப்பந்தக்காரர்களுடன் உடன்-படிக்கை மேற்கொள்ளப்ப-ட்டிருந்தது. வேலை ஆரம்பிக்கும் முற்பணம் மற்றும் மேற்கொண்ட வேலைகளின் பெறுமதியாக ரூபா. 83,010,286 ஐ ஒப்பந்தக்காரர்-களிடம் செலுத்தப்பட்டிருப்பினும், வேலை பொறியியலாளரால் சான்றுப்படுத்தப்பட்ட பெறுமதி ரூபா. 43,058,226 ஆகியதால் ரூபா. 39,951,060 ஐ மேலதிகமாக செலுத்தப்பட்டிருக்கையில், | 2019 ஒக்டோபர் 28 ஆந் திகதியில் மேற்கொண்ட வேலைகளின் பெறுமதி ரூபா. 43,058,226 ஆவதுடன், 2020 பெப்ருவரி மாதம் வரை மேற்கொண்ட நிருமாணிப்புகளின் பெறுமதி கணக்கிடப்படவில்லை. அதேபோன்று வேலை பெறும-தியில் ரூபா.4,305,883 ஐ பிடிபண-மாகவும், முற்பண முறி பொருட்டு ரூபா. 9,567,671 ம் மற்றும் எஞ்சிய பணத்தொகையாக(balance pay ment) ரூபா .13,563,063 ஐ பிடித்து வைக்கப்பட்டுள்ளதுடன், ரூபா 15,752,571.65 ஐ செயலாற்றுகை பிணையாக பல்கலைக்கழகத்தால் (encash) அறவிடப்பட்டுள்ளது. | பிரச்சினைகளை தீர்க்கப்பட்டு கட்டிடம் நிருமாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிருமாணிப்பு பணிகள் 2020 பெப்ருவரி தொடக்கம் கைவிடப்பட்டிருந்தது. முற்பணத்திற்கான முறி 2020 பெப்ருவரி 07 ஆந் திகதி முடிவுற்றிருந்ததுடன், அதனை பணமாக்குவதற்கு அல்லது முறியின் காலவெல்லை நீடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | ஒப்பந்தக்காரரால் முற்பண முறியை நீடிக்காமை காரணமாக உரிய முறிக்கான பணத்தொகையை பலக்லைக்கழகத்திடம் செலுத்தும்படி வங்கியிடம் கட்டளையிட்ட போதும், செலான் வங்கியால் அந்த முறியினை மேலும் நீடிக்க இயலாதென 2020 மார்ச் 12 ஆந் திகதியில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த கைத்தொழிலை முன்கொண்டு செல்வதற்காக அமைச்சின் அனுமதியுடன், முத்தரப்பு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |

**3.7 மனித வளங்களின் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் கல்விசார் பணியாற்றொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 506 பதவிகளில் 110 பதவிகள் மற்றும் கல்விசாரா பணியாற்றொகுதியில் அங்கீகரிக்கப்பட்ட 530 பதவிகளில் 132 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. மீளாய்விற்கான ஆண்டில் லீவு தின சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவாக ரூபா. 19,854,304 ஐ செலுத்துவதற்கு கல்விசாரா பணியாற்றொகுதியில் நிலவிய வெற்றிடங்களும் காரணமாக அமைந்துள்ளது. | தற்போது நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்புகளுக்கு ஏற்புடையதான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும், கோவிட் தொற்று நோய் காரணமாக நேர்முகப் பரீட்சை நடாத்துவதற்கு முடியாமை, நிருவாக பதவிகளின் பொருட்டு தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாமை மற்றும் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைகள் 01/2020 மற்றும் 02/2020 இற்கு அமைவாக ஆரம்ப சேவை தொகுதியில் பதவிகளை ஆட்சேர்ப்புச் செய்வ-தனை இடைநிறுத்தி இருத்தல் என்பன வெற்றிடங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு காரணமாகியுள்ளது. | வெற்றிடங்களை பூர்த்திசெய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நள்ளாளுகை

### 4.1 நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் - 2020 ''நிகழ்ச்சி நிரல்'' தொடர்பாக இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் அறிந்திருப்பினும், தமது விடய-வெல்லைக்கு அமைவாக அடைந்-துக்கொள்ள வேண்டிய நிலையான அபிவிருத்தி நோக்கங்களை அடையாளம் காணமை காரணமாக அந்த நோக்கங்களுக்கான இலக்கு-கள், அடிப்படை தரவுகள், இலக்குகளை அடைந்துக்கொள்ள வேண்டிய திருப்புமுனைகள் மற்றும் முன்னேற்றத்தை அளவிட முடியுமான சுட்டிகளை அடையளம் காணப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்தால் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில், அடையாளம் காணப்பட்ட இலக்குகள் பற்றி 2018 மற்றும் 2019 ஆண்டு அறிக்கை-களிலும், 2021 செயற்பாட்டு திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. | நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான நீண்டகால திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்தல் வேண்டும். |